798


# வலயக்கல்வி அலுவலகம்- வவுனியா தெற்கு
## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2020
## சித்திரம்

தரம்- 06 நேரம் - 2 மணி

பகுதி I

**எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை தருக.**

1 தொடக்கம் 5 வரையான வினாக்களுக்கு கீழ்வரும் ஒளிப்படத்தின் துணையுடன் விடை எழுதுக.



1. இங்கு காணப்படுவது .............................. கட்டிடக்கலை அமைப்புடைய கிறிஸ்தவ தேவாலயம் ஆகும்.

2. இங்குள்ள ஒளிப்படத்தில் காணப்படும் தேவாலயத்தின் பிரதான நுழைவாயிலுக்கு மேலே கண்ணாடியாலான அழகிய வட்ட வடிவ ........................................ உள்ளது.

3. இலங்கையில் மேற்படி கிறிஸ்தவ தேவாலயங்கள் ........................................... நிர்மாணிக்கப்பட்டவையாகும்.

4. வளைவான கூரை அமைப்பினையும், வட்டவடிவ வில்வளைவான யன்னல் , கதவுகளையும் ........................................ தேவாலயங்களில் காணலாம்.

5. கிறிஸ்தவ தேவாலயங்களின் கிடைப்படம் .................................. வடிவமுடையது.

6 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்கு மிகச் சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

6. நிறக்கடதாசித் துண்டுகளைக் கொண்டு கிழித்து ஒட்டிச் செய்யப்படும் சித்திரம்
   (1) மொசாக் (3) கொலாஜ்
   (2) கிறபிக் (4) பரவரூபச் சித்திரம்

7. நீலம், மஞ்சள், சிவப்பு ஆகிய வர்ணங்களை சம அளவில் கலக்கும் போது பெறப்படும் வர்ணம்
   (1) ஊதா (3) செம்மஞ்சள்
   (2) கபிலம் (4) கறுப்பு

kalvi.lk

8. உலகெங்கிலும் வாழுகின்ற பௌத்த மக்களின் சிறப்புமிக்க நாள்
(1) சித்திரப் பௌர்ணமி தினம்
(2) வெசாக் பௌர்ணமி தினம்
(3) றம்சான் பண்டிகை
(4) முழுநோன்மதி தினம்

9. கோலம் ஒன்றில் இருக்க வேண்டிய முக்கிய பண்புகளில் ஒன்று
(1) இயற்கைப்பண்பு
(2) பிரகாசத்தன்மை
(3) முப்பரிமாணப் பண்பு
(4) வர்ணப்பொருத்தம்

10. இந்துக்களால் தைமாதத்தின் முதல்நாளில் கொண்டாடும் விழா
(1) தீபாவளி
(2) தைப்பொங்கல்
(3) ஆடிப்பிறப்பு
(4) சித்திரை வருடப்பிறப்பு

11 தொடக்கம் 15 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

11. பள்ளிவாசலின் நுழைவாயிலுக்கு மேலாக கட்டடத்தின் இரு மருங்கிலும் மிகஉயரமாகக் காணப்படும் பிறையுடன்கூடிய தூண் அமைப்பு எவ்வாறு அழைக்கப்படுகிறது?

12. இந்து ஆலயங்களில் சிவபெருமானின் வாகனமாக கருங்கல்லில் செதுக்கப்பட்டிருக்கும் விலங்கு உருவத்தின் பெயரை எழுதுக?

13. இந்துக்கள் நிலத்தை அழகுபடுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் அலங்காரம் எப்பெயர் கொண்டு அழைக்கப்படும்?

14. இலங்கையில் தாதுகோபங்கள் இந்தியாவின் எந்த தாதுகோபத்தைப் பின்பற்றி அமைக்கப்பட்டுள்ளது?

15. தாதுகோபத்தின் பிரதான மூன்று பகுதிகளும் எவை?

16தொடக்கம் 20 வரையான வினாக்களுக்கு பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளி நிரப்புக.

16. யேசு பிரானின் தாயார்........................................பெயர் கொண்டு அழைக்கப்படுகிறார்.

17. அராபிய வியாபாரிகள் வணிகத்தின் பொருட்டு இலங்கைக்கு வருகை தந்ததன் விளைவாக ........................................................ கட்டப்பட்டன.

18. இந்து ஆலயங்களில் மூலமூர்த்தி வைக்கப்பட்டிருக்கும் இடம் .................................. எனும் பெயர் கொண்டு அழைக்கப்படும்.

19. இஸ்லாமிய மதத்தவர் .................................................... பண்டிகையைக் கொண்டாடுவர்.

20. பச்சை வர்ணத்தின் எதிர்வர்ணம் ................................வர்ணம் ஆகும்.

(20*2 = 40 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

## பகுதி III

விரும்பிய **ஒன்றைத்** தெரிவு செய்து வரைக.

(1) எங்கள் பாடசாலைத் தோட்டம்

(2) வாசணை மலரும் வண்ணத்திப் பூச்சிகளும்

(3) பிறந்தினப் பரிசுப் பொதிக்கான உறைக்கு அலங்காரம்

(4) சிறுவர் புத்தக அட்டை ஒன்றை வரைந்து வர்ணம் தீட்டுக.


(5) கேத்திர கணித அலங்காரங்களைக் கொண்டு பரவ உருவ முறையில் அமைந்த சீத்தைத்துணி அலங்காரம்

(40 புள்ளிகள்)

Education

பகுதி II

கீழே தரப்பட்டுள்ள பொருளுக்கு முப்பரிமாண முறையில் வர்ணம் தீட்டிப் பூரணப்படுத்துக. (20 புள்ளிகள்)



Education கல்வி අධ්‍යාපන

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
Zoom app மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி அධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457